03.02.2017

தினமணி

**வேளாண் உற்பத்திப் பொருள்களை 6 மாதம் வரை சேமிப்புக் கிடங்கில் வைத்துக்கொள்ளலாம்: அமைச்சர் தகவல்**



திருவாரூரில் ரூ.3.80 கோடியில் கட்டப்பட்டு வரும் சேமிப்புக் கிடங்குகளில் விவசாயிகள் தங்களது வேளாண் உற்பத்திப் பொருள்களை 6 மாதம் வரை வைத்துக் கொள்ளலாம் என தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் தெரிவித்தார்.

திருவாரூரில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிக வரித்துறை சார்பில் ரூ.3.80 கோடி மதிப்பில் கட்டப்பட்டுவரும் சேமிப்புக் கிடங்குகள் கட்டுமானப் பணிகளை வியாழக்கிழமை ஆய்வுசெய்த அமைச்சர் மேலும் பேசியது:

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ரூ.1.50 கோடியில் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவிலான சேமிப்பு கிடங்கு, ரூ.1 லட்சம் மதிப்பில் 600 மெட்ரிக் டன்

சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. மேலும் இவ்வளாகத்தில் தகவல் தொழில்நுட்ப பயிலகம் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம் ரூ.70 லட்சம் மதிப்பில் கட்டுமானப் பணி தொடங்கப்படவுள்ளது. அத்துடன், ரூ.60 லட்சம் மதிப்பில் வேளாண்மை பொறியியல் துறைக்கு உர ஆய்வகம் அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

இதேபோல், மன்னார்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிடங்கு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 600 மெட்ரிக் டன் பரிவர்த்தனைக் கூடங்கள் 2 கட்டப்பட்டுள்ளன. வடுவூர் ஒழுங்குமுறை விற்பனை வளாகத்தில் 600 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ரூ.1 கோடி மதிப்பில் அலுவலகம் மற்றும் உலர் களம் வசதியுடன் சேமிப்புக் கிடங்கு கட்டும்பணி நடைபெற்று வருகிறது. பூந்தோட்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு சொந்த கட்டடம் கட்ட மூங்கில்குடி அரசு விதைப் பண்ணையில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தங்கள் விளைப் பொருள்களை இருப்புவைத்து பொருளீட்டுக் கடன் பெற்றுக்கொள்கிறார்கள். இதற்கான வட்டி 5 சதவீதம் மட்டு மே. முதல் 15 நாள்களுக்கு வட்டி கிடையாது. இவ்வாறு 6 மாதம் வரை விவசாயிகள் தங்கள் விளைப்பொருள்களை இருப்பு வைத்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் இச்சலுகை உண்டு. இவர்களுக்குரிய வட்டி விகிதம் 9 சதவீதமாகும். வியாபாரிகள் 3 மாதம் வரை இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

பொருளீட்டு கடனாக கடந்த ஆண்டு இக்குழு மூலம் ரூ.2.53 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் காமராஜ்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் த. மோகன்ராஜ், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகவரித் துறை செயலர் சேரலாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சின்னமனூரில் விற்பனையாகாமல் தோட்டத்திலேயே தேங்கிய செங்கரும்புகள்: விவசாயிகள் கவலை**



சின்னமனூரில் விற்பனையாகாமல் தோட்டங்களிலேயே செங்கரும்புகள் தேங்கியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இங்கு விளையும் செங்கரும்புகளை தேனி மாவட்டம் உள்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான வியாபாரிகள் அதிகளவில் கொள்முதல் செய்வர். ஆனால் இந்த பொங்கல் பண்டிகைக்கு எதிர்பார்த்த அளவு விற்பனையாக வில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறும் போது பொங்கல் பண்டிகை நேரத்தில் இப்பகுதியில் கரும்பு விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். ஆனால் இந்தாண்டு மத்திய அரசு கருப்புப் பணத்தை ஒழிக்கும் நடவடிக்கையாக ரூ.500, ரூ.1000 நோட்டுகளை செல்லாது என அறிவித்ததால் வியாபாரிகள் பணமின்றி அவதியடைந்தனர். இதனால் இப்பகுதியில் செங்கரும்பு விற்பனையும் பெரும் பாதிப்புக்குள்ளானது. பொங்கல் விழாவுக்கு சில நாள்களுக்கு முன் சிறு வியாபாரிகளின் வருகை அதிகளவில் இருந்தது. ஆனால் வழக்கமாக வரும் பெரும் வியாபாரிகளின் வருகை பாதியாக குறைந்ததால் சுமார் 30 சதவீத கரும்பு விற்பனையாகாமல் தோட்டத்திலேயே தேக்கிக் கிடக்கிறது. இதனால் எங்களது பொருளாதாரம் கேள்விக்குறியாகி விட்டது. எனவே தமிழக அரசு எங்களுக்கு உரிய நிவாரணம் தர வேண்டும் என்றனர்.